பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 137** **நாள்: 30.09.2016**

**சாதாரண உள்ளாட்சித் தேர்தல்–2016யை முன்னிட்டு, தேர்தல் தொடர்பான புகார்களை தெரிவிக்க ஏதுவாக தேர்தல் கட்டுப்பாட்டு அறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.**
**கட்டுப்பாட்டு அறையில் செயல்படும் கட்டணமில்லா தொலைபேசி வாயிலாக பொதுமக்கள் தேர்தல் குறித்த புகார்களை தெரிவிக்கலாம்.**
**மாவட்ட தேர்தல் அலுவலர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர். தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்**

சாதாரண உள்ளாட்சித் தேர்தல்–2016யை முன்னிட்டு, தேர்தல் குறித்த புகார்களை பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகையில் செயல்பட்டு வரும் தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் தெரிவிக்கலாம். தேர்தல் கட்டுப்பாட்டு அறையானது ஒரு உதவி செயற்பொறியாளர் மேற்பார்வையில் ஒரு உதவி பொறியாளர், கண்காணிப்பாளர் மற்றும் இரண்டு உதவியாளர்களுடன் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் செயல்படும் வண்ணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கட்டுப்பாட்டு அறையில் புகார்களை பெறுவதற்காக 5 இணைப்புகள் கொண்ட கட்டணமில்லா தொலைபேசி எண். 1800 425 7012 அமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தேர்தல் குறித்து ஏதேனும் புகார்களை தெரிவிக்க விரும்பினால் மேற்கண்ட எண்ணில் 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளலாம்.

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்களை கணினியில் பதிவு செய்து சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு தெரிவித்து, உடன் மேல்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட தேர்தல் அலுவலர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர். தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி